# 27

# பிற சமயங்களை மதித்தல்

இஸ்லாம் அமைதியின் மார்க்கம். அது உலகில் சுபீட்சத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த விரும்புகிறது. மக்களிடையே சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் தோற்றுவிக்க முயற்சிக்கிறது. அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதைப் போதிக்கிறது. பிற சமூகங்களுடன் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளுமாறு பணிக்கிறது. ம் நன்மை பயக்கும் செயல்களில் பரஸ்பரம் ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுக்கிறது. உதவுதல், ஒத்துழைத்தல், நீதியுடன் உறவாடல், விட்டுக் கொடுத்தல் போன்ற உயர் விழுமியங்களை எப்போதும் கைக்கொள்ளுமாறு வேண்டுகிறது.

### மனிதர்கள் யாவரும் சகோதரர்கள்

இஸ்லாம் மனித சகோதரத்துவத்தை ஏற்று வலியுறுத்துகின்றது. எல்லா மனிதர்களதும் மூதாதையர் ஆதமும் ஹவ்வாவுமே என்கின்றது. அனைத்து மக்களும் அவ்விருவரதும் வழித்தோன்றல்கள் என்றும் குறிப்பிட்டு அனைவரும் சகோதரர்கள் என்று போதிக்கிறது.

**''மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்து தான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும்பொருட்டு உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்..'' (49: 13)**

*''மனிதர்களே உங்கள் இரட்சகன் ஒருவனே! அறிந்துகொள்ளுங்கள் அரபிகள் அரபிகளல்லாதோரை விடவோ, வெள்ளையர்கள் கறுப்பர்களை விடவோ மேம்பட்டவர்களல்லர். இறையச்சத்தின் மூலமே நீங்கள் உயர்ந்தவராகக் கணிக்கப்படுவீர்கள்'' (அஹ்மத்)* என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை அனைத்து மக்களும் சகோதரர்களே என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

சகோதரத்துவம் பற்றிய இஸ்லாத்தின் கருத்து மிகவும் ஆழமானது; யதார்த்தமானது. இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகவும் அது அமைந்துள்ளது. *''இறைவா! மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என நான் சாட்சி பகர்கிறேன்''* என இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு பர்ளான தொழுகையின் பின்னரும் பிரார்த்தனை செய்யும் வழக்கம் கொண்டிருந்தார்கள் என ஸைத் பின் அர்கம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள். (அஹ்மத், அபூதாவூத்)

அல்குர்ஆனின் பெரும்பாலான போதனைகளும்கூட 'மனிதர்களே' என்றே விழிக்கிறது. காரணம் அதன் போதனைகள் அனைத்து மக்களுக்கும் உரித்தானது என்பதை எடுத்துக் காட்டுவதற்கேயாகும். எனவே, எம்மிடையே நாம் அனைவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள், சகோதரர்கள் என்ற உணர்வு இருத்தல் வேண்டும்.

- ''தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பாதவரை ஒருவன் முஸ்லிமாக மாட்டான்.'' (முஸ்னத் அஹ்மத்)
- ''மண்ணிலுள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தால் விண்ணிலுள்ள இறைவன் உங்களை நேசிப்பான்.'' (திர்மிதி)
- ''படைப்புகளனைத்தும் இறைவனின் குடும்பமே.'' (பைஹகி)

எனவே, இதற்கமைய இன, மத, பிரதேச வேறுபாடின்றி எல்லா மனிதர்களையும் நேசிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படை போதனையாக இருப்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.

### சமய சுதந்திரம்

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உள்ளது. இதனை இஸ்லாம் ஏற்றுள்ளது. இதற்கமைய மாறுபட்ட கொள்கையையோ, மதத்தையோ பின்பற்றுகின்றவர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரிகள் அல்லர் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். அதேபோன்று ஒருவர் ஏற்றிருக்கின்ற மார்க்கத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமையும் எவருக்குமில்லை. இதனையும் இஸ்லாம் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

**''மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது.''** (2: 256)

**''அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவராக நீர் இல்லை.''** (88: 22)

அத்துடன் அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவோரது கடவுள்களை இழிவுபடுத்த வேண்டாமென்று அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது.

**''(இறைநம்பிக்கை கொண்டவர்களே) அவர்கள் அல்லாஹ்வை விடுத்து யாரிடம் பிரார்த்தனை புரிகின்றார்களோ அவர்களை நீங்கள் ஏசாதீர்கள்.''** (6: 108)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆட்சி புரிந்த மதீனாவில் யூதர்களும் சிலைகளை வணங்கியவர்களும் இருக்கவே செய்தனர். மதீனாவின் அருகே நஜ்ரான் தேசத்தில் கிறிஸ்தவர்கள் இருந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஆட்சிக் காலத்தில் எல்லா மதத்தவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டன.

## நீதி பெறும் உரிமை

இனம், மொழி, பிரதேசம், நாடு ஆகிய எல்லைகளைத் தாண்டி மனிதர்கள் இணைந்து சமாதானமாக வாழ்வதற்காக இஸ்லாம் முன்வைக்கும் மற்றொரு விடயம் அனைவருக்கும் சமமான நீதியை உறுதி செய்வதாகும். சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் நீதத்துடன் நடத்துவது அதிகாரத்தின் சகல மட்டங்களில் உள்ள தலைவர்களதும் கடமையாகும். இந்தக் கடமை மிகவும் பாரியது. இறையச்சத்திற்கு நிகரானது என்று நீதியின் தாற்பரியத்தை அல் குர்ஆன் விளக்குகிறது.

**''நீதி செலுத்துங்கள், இதுவே இறையச்சத்திற்கு மிகவும் நெருக்கமானது.'' (5: 8)**

ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் அல்லது குழுவினர் மீது ஒருவரோ ஒரு குழுவினரோ கொண்டுள்ள விருப்புவெறுப்பு நீதி செலுத்துவதில் செல்வாக்குச் செலுத்தக் கூடாது என்று அல்குர்ஆன் கண்டிப்பாக கட்டளையிட்டுள்ளது.

**''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் நீதி செலுத்தி அல்லாஹ்வுக்கு சாட்சியாளர்களாக இருங்கள். நீங்கள் செலுத்தும் நீதி உங்களுக்கோ உங்களது பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ எதிரானதாக இருந்தாலும் கூட'' (4: 35 )**

முஸ்லிமல்லாத மக்களின் உயிர், உடைமை, நம்பிக்கை, கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் விடயத்திலும் இஸ்லாம் கரிசனை காட்டுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்: ''ஒப்பந்தக்காரர் (இஸ்லாமிய அரசில் உள்ள முஸ்லிம் அல்லாத குடிமகன்) ஒருவனுக்கு ஒரு முஸ்லிம் அநீதியிழைத்து விட்டாலோ, அவன் உரிமையைப் பறித்துவிட்டாலோ, அவன் சக்திக்கு மீறிய சுமை களை அவன் மீது சுமத்திவிட்டாலோ, அவனுடைய பொருள் எதையேனும் பலவந்தமாக எடுத்துக் கொண்டாலோ, மறுமை நாளில் அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் அந்த முஸ்லிமுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்கில் அந்த முஸ்லிமல்லாத குடிமகனின் சார்பில் நானே வாதிடுவேன்.'' (அபூதாவூத்)

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது ஆட்சியின்போது அம்ரிப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எகிப்தின் கவர்னராக இருந்தார். இவரது மகன் ஒருமுறை கிப்திய சமூக கிறிஸ்தவ இளைஞன் ஒருவனைக் கடுமையாக அறைந்து விட்டார். அவமானம் தாங்க முடியாத அந்த இளைஞன் இச்சம்பவத்தை கலீபா உமரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். கலீபா உமர் கவர்னரையும் அவரது மகனையும் மதீனாவிற்கு வருமாறு பணிப்புரை விடுத்தார்.

கலீபாவிற்கு முன்பாக கவர்னர் அம்ர் இப்னு ஆஸும் அவரது மகனும் தாக்கப்பட்ட இளைஞனும் நிறுத்தப்பட்டனர். கலீபா அந்த இளைஞனை நோக்கி 'உனக்கு கவர்னர் மகன் எப்படி அறைந்தாரோ அப்படி ஓர் அறையை கவர்னரின் மகனின் கன்னத்தில் விடு' என கட்டளைப் பிறப்பித்தார். அறை விழுந்தது. கவர்னர் அம்ர் இப்னு ஆஸ் அதிர்ச்சியில் உறைந்து போனார். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். ''எல்லா தாய்மார்களும் தமது பிள்ளைகளை சுதந்திரவான்களாகவே பெற்றெடுத்

*துள்ளனர். அப்படியிருக்க எப்போது நீங்கள் அவர்களை அடிமைகளாக்கக் கற்றுக் கொண்டீர்கள்?''*

**எனவே, முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையாகவோ சிறுபான்மையாகவோ வாழ நேரிடலாம். ஆனால் அவர்களது வாழ்வின் வழிகாட்டி இஸ்லாம் ஒன்றாகவே இருக்க வேண்டும். சகவாழ்வு உறவுகளின் அடிப்படையாக அமைய வேண்டும். அங்கே சமாதானம் நிலைகொள்ள வேண்டும். இஸ்லாத்தின் தனித்துவத்தைப் பேணுவதோடு பிற சமூகத்தினரையும் மதித்து வாழ்வது இன்றியமையாததாகும்.**

**பயிற்சி**

1. மனிதர்கள் யாவரும் சகோதரர்கள் என்பதை வலியுறுத்தும் ஹதீஸ்கள் இரண்டினைக் குறிப்படுக.
2. பிற சமயங்களை மதித்தல் தொடர்பாக அல்குர்ஆனின் போதனைகள் இரண்டினை எழுதுக.
3. உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் நீதியை நிலைநாட்டுதல் தொடர்பாக இடம்பெற்ற சம்பவமொன்றைக் குறிப்பிடுக.
4. பிற சமயங்களை மதித்தல் தொடர்பாக உமது நண்பனுக்கு நீர் கூறும் ஐந்து ஆலோசனைகளை எழுதுக.